மாண்புமிகு திரு. செ. மாதவன் : நீலகிரி மாவட்டம் முழுவதும் கிடைக்கக்கூடிய பாக்ஸைட்டின் அளவு 3, 4 மில்லியன் டன்னாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அவற்றுள் ஒன்றரை மில்லியன் டன் பாக்ஸைட் 40 சதவீதத்திற்கும் குறைந்த அலுமினியம் கலந்த கீழ்த் தரத்தைச் சேர்ந்ததாக இருக்கின்றது. எஞ்சியது 45 சதவீதச் சராசரி அளவு அலுமினியம் கலந்த சிறந்த தரத்தைச் சேர்ந்த பாக்ஸைட் ஆகும்.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, ஒரு அலுமினியம் தொழிற்சாலை நிறுவுவதற்கு குறைந்த பட்சம் எவ்வளவு பாக்சைட் தேவையாகும்? நீலகிரியில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்து வதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளனவா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த எவ்வளவு தேவையென்ற விவரம் இல்லை. தேவைக்குப் போதுமான அளவுக்கு நமக்குக் கிடைக்கிறது. இன்னொரு தொழிற்சாலை இருந்தால் இலாபகரமாக இருக்கும் என்று தோன்றவில்லை.

திரு. ஜெ. பெள்ளி கௌடர் : பாக்சைட் இல்லாமல் மற்ற கனிவளங்கள் நீலகிரி மாவட்டத்தில் இருப்பதாகக் குறிப்புகள் உள்ளனவா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைப்பற்றிய தகவல் இல்லை.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

*** 285 வினா.—திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் கைத்தறி உற்பத்தியாளர்கள் சங்கங்கள் எத்தனை உள்ளன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1,025 கைத்தறி நெசவாளர் சங்கங்கள் உள்ளன.

திரு. சோ. அழகர்சாமி : இப்பொழுது இந்தக் கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களில் சமீப காலத்தில் நூலின் விலை 5 ரூபாயிலிருந்து 10 ரூபாயாக உயர்த்தப்பட்டிருப்பதால், தேக்கம் ஏற்பட்டு இதன் காரணமாக நெசவாளர்களுக்கு வேலை கிடைக்காமல் கஷ்டப் படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, கைத்தறித் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு வருமானம் அதிகமாக வருகின்ற அளவுக்கும் அவர்களுக்கு வேலை பாதிப்பு ஏற்படாமலும் இருக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கைத்தறி நெசவு நூலின் விலையேற்றத்தினால் அவர்களுக்குப் பாதகம் ஏற்பட்டிருக்கிறது, வேலை இழப்பு ஏற்படுகிறது என்று அவர்கள் சொன்னார்களே தவிர அவற்றிற்கு என்ன பரிகாரம் என்று சொல்லியிருப்பார்

1969 செப்டம்பர் 13]

களானால் நன்றாக இருந்திருக்கும். விலையை உயர்த்தினால் நூற்பாலை பாதிக்கப்படுகிறது, கைத்தறி நெசவாளர்களுக்கு வேலைப் பாதிப்பு ஏற்படுகிறது. இதைத்தவிர, விசைத்தறித் துணிகள் ஏராளமாக நம்முடைய சந்தையிலே வந்து கொண்டிருக்கின்றன. நெசவாளர்களுடைய வருமானம் அதிகமாகவேண்டும், வேலை யில்லாத் திண்டாட்டம் போக வேண்டும், நம்முடைய சந்தையையும் நாம் பிடித்துக்கொண்டு மற்ற மாநிலங்களுக்கும் நம்முடைய துணிகளை அனுப்ப வேண்டுமென்றால் விசைத் தறிகளை நாம் நாடவேண்டியதுதான்.

திரு. சு. துரைசாமி : கோயம்புத்தூரில் எவ்வளவு சங்கங்கள் இருக்கின்றன ? அவற்றிலே செயல்படாமல் இருப்பவை எத்தனை? செயல்படாத சங்கங்களைத் தொடர்ந்து செயல்படச் செய்வதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கோவை மாவட்டத்தில் என்று தனியாக இல்லை. மொத்தத்திலே 119 கைத்தறி நெசவாளர் சங்கங்கள் லிக்விடேஷன் புரசீடிங்ஸின்கீழ் வந்து இருக்கின்றன.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து கைத்தறித் தொழிலாளர்கள் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகியிருப்பதாகத் தெரிகிறது. கைத்தறி நெசவாளர்கள் ஒரு பெரிய சமூகம், அந்தச் சமூகம் கஷ்டத்திற் குள்ளாகியிருக்கின்ற நிலையில் அதற்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்கு அரசாங்கம் என்ன யோசனை செய்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் முன்னாலேயே சொன்னேன். கைத்தறித் துணி விலைபோனால்தான் பரிகாரம் காண முடியும். இதற்காக கைத்தறி நெசவாளர்கள் சங்கங்களின் தலைவர்களை அழைத்துப் பேசியிருக்கிறோம். இப்பொழுது 12,500 விசைத்தறிகள் ஒதுக்கப்பட்டு இருக்கின்றன. அதன்மூலம் அவர்களுக்கு வருமானம் கூடுகின்ற வாய்ப்பும் ஏற்படும் என்று சொல்லப்படுகிறது, அதைப்பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

கைத்தறி நெசவாளர்களுக்குக் கூலி நிர்ணயக் குழு

*286 வினா.—**திரு. சி. கோவிந்தராசன் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்குக் கூலி நிர்ணயக் குழு அமைக்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்திற்கு உண்டா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது அக் குழு அமைக்கப்படும் ?

(உ) அக் குழுவில் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் உரிய அளவுக்கு அங்கம் வகிக்க ஏற்பாடு செய்யும் உத்தேசமுண்டா ?